பணியாளர் மற்றும் நிருவாகச்
சீர்திருத்தத் (ஏ) துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை-9.
ஹேவிளம்பி, ஆவணி 19,
திருவள்ளுவர் ஆண்டு 2048.

கடித எண். 28939/ஏ2/2017-1, நாள் : 05.09.2017

அனுப்புநர்
டாக்டர். சீ. ஸ்வர்ணா, இ.ஆ.ப.,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
அனைத்துத் துறைச் செயலாளர்கள், சென்னை-9.
அனைத்துத் தலைமைச் செயலகத் துறைகள், சென்னை-9.
அனைத்துத் துறைத் தலைவர்கள் / மாவட்ட ஆட்சியர்கள்/
மாவட்ட நீதிபதிகள் / குற்றவியல் தலைமை நீதிபதிகள்.
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்,
சென்னை-3.

ஐயா / அம்மையீர்,

பொருள்: பொதுப்பணிகள் – அரசுப் பணியாளர்கள் அனைவரும் கட்டாயமாக நிழற்பட அடையாள அட்டை அணிதல் – அறிவுரைகள் வெளியிடுதல் - தொடர்பாக.

பார்வை:
1. அரசு ஆணை(நிலை) எண்.363, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்(ஏ) துறை, நாள் 01.12.2004.
2. அரசுக் கடித எண்.3975/ஏ/2005-1, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்(ஏ) துறை, நாள் 22.02.2005.
3. அரசுக் கடித எண்.47690/ஏ2/2013-1, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்(ஏ) துறை, நாள் 20.12.2013.

---

பார்வை ஒன்றில் காணும் அரசாணையில், அரசுப் பணியாளர்கள் அனைவரும், அலுவலகத்தில் பணியாற்றும் நேரங்களில், அவர்களது நிழற்பட அடையாள அட்டையினைத் தவறாமல் அணிய வேண்டும் என்று ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், அவ்வாணையில் அடையாள அட்டையின் மாதிரியும், அதில் அரசுப் பணியாளர்களது பெயர் மற்றும் பதவி ஆகியவை எவ்வாறு இடம் பெற வேண்டும் என்பது போன்ற விவரங்கள் ஆங்கிலத்தில் மட்டும் குறிப்பிடப்பட்டு ஆணையிடப்பட்டது.

2. பார்வை இரண்டில் காணும் அரசுக் கடிதத்தில், அடையாள அட்டையில் பணியாளரின் பெயரையும், பதவியினையும் மட்டும், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் ஒன்றின் கீழ் ஒன்று இடம்பெறுமாறு மாற்றி அமைத்து, உரிய அடையாள அட்டைகளை வழங்குமாறு துறைத் தலைவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர்களும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள்.

த.பி.பா

3. மேற்குறிப்பிட்ட அரசாணை மற்றும் அரசுக் கடிதம் ஆகியவற்றில் வெளியிடப்பட்டுள்ள அறிவுறுத்தங்களை பணியாளர்கள் அனைவரும் தவறாமல் கடைப்பிடிக்க வேண்டுமென்று பார்வை 3-ல் காணும் கடிதத்தில் மீண்டும் அறிவுறுத்தங்கள் வெளியிடப்பட்டன. இருப்பினும், நாளடைவில் அரசுப் பணியாளர்கள் தங்களது அடையாள அட்டையினை, அலுவலகத்தில் பணியாற்றும் நேரங்களில் அணிந்து பணியாற்றுவதில்லை என்பது தொடர்பான புகார்கள் அரசுக்கு வந்தவண்ணமே உள்ளன.

4. எனவே, இது தொடர்பாக மேலே குறிப்பிட்டுள்ள அரசாணை மற்றும் அரசுக் கடிதங்கள் ஆகியவற்றில் வெளியிடப்பட்டுள்ள அறிவுறுத்தங்களை அரசுப் பணியாளர்கள் அனைவரும் தவறாது கடைப்பிடிக்க வேண்டுமென்றும், அனைத்துத் துறைத் தலைவர்களும், மாவட்ட ஆட்சியர்களும் தங்களுக்குக் கீழுள்ள சார்நிலை அலுவலகங்களுக்கு, இது தொடர்பாகத் தக்க அறிவுரைகள் வழங்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தங்கள் உண்மையுள்ள,

6/9/17

அரசு செயலாளருக்காக.

நகல்

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை செயலாளரின் தனிச் செயலர், சென்னை-9.

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்(பயிற்சி) துறை செயலாளரின் தனிச் செயலர், சென்னை-9.

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அனைத்துப் பிரிவுகள் / அலுவலர்கள், சென்னை-9.

இருப்புக் கோப்பு / உதிரி நகல்.